**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**<u>OS.NO.22/2022</u>**

| | | |
|---|---|---|
| Name | : | சிவகுரு |
| Father Name | : | வஜ்ஜிரவேலு |
| Village | : | பள்ளிகொண்டா |
| Taluk | : | அணைகட்டு தாலுக்கா |
| Caste | : | |
| Calling /Occupation | : | |
| Religion | : | |
| Age | : | 72 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.04.2024.

<u>முதல் விசாரணை</u>

நான் ஆவண எழுத்தராக சுமார் 50 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். வேலூர் மாட்டம், முழுவதுமாக பணிசெய்கிறேன். நான் குடியாத்தத்திலும் ஆவண எழுத்தராக பணிசெய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1, 5 புரோநோட்டில் உள்ள கையெழுத்து வரைவு செய்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ3 4 புரோநோட்டுக்களில் அதில் வரைவு செய்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புரோநோட்டுக்களை நான் தான் வரைவு செய்தேன். இந்த 9 புரோநோட்டுக்களையும் எங்கு வைத்து வரைவு செய்தேன் என்றால் குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வெளியில் வைத்து 4.8.2014 தேதியில் 5 பாண்டுகளில் வரைவு செய்தேன்.

வா.சா.ஆ3 உள்ள 4 பாண்டுகளில் 1.10.2014-ல் வரைவு செய்துள்ளேன். 4 பாண்டுகளும் தலா ரூ. 2 1/2 லட்சம், 4வது பாண்டு ரூ.2,37,000/-. தொகைக்கு எழுதியுள்ளேன். வா.சா.ஆ1-ல் 4.8.2014 தேதியிட்ட 5 பாண்டுகளில் 1 பாண்டில் 2 லட்சம், 2 வது பாண்டில் 2 லட்சம், 3வது பாண்டில் ரூ.2 லட்சம், 4வது பாண்டில் 2 லட்சம், 5வது பாண்டில் 2 லட்சம், ஆகிய தொகைக்கு வரைவு செய்துள்ளேன். இந்த பாண்டுகளில் வரைவு செய்தது மட்டும் நான் செய்தேன். இந்த பாண்டுகளில் தனித்தனி தேதிகளில் தான் வரைவு செய்ததா என்றால்ஆமாம். வரைவு செய்தபோது வரைவு செய்யும் இடத்தில பணம கொடுத்தவரும், வாங்கியவரும் ஆகியஇருவரும் இருந்தார்கள். சாட்சிகள் இரண்டு பேர் கையெழுத்திட்டார்கள் அந்த சாட்சி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

மொத்தம் 9 புரோநோட்டுகளிலும் பணம் வாங்கியவர் கையெழுத்து செய்தாரா என்றால் ஆமாம். சாட்சிகளும் என்னு முன்னிலையில் தான் கையெழுத்து செய்தார்கள். 9

புரோநோட்டுகளிலும் வரைவு செய்த பின் கையெழுத்து போட்டேனா சாட்சிகள் கையெழுத்து போட்டபின் போட்டேனா என்றால், சாட்சிகள் கையெழுத்து போட்ட பின்பு தான் நான் கையெழுத்து போட்டேன். நான் எப்போதும் ஒரே பேனா தான் உபயோகப்படுத்துவேன். பணம் வாங்குபவரும், சாட்சிகளும் வேறு எழுது பொருளில் எழுதினால் எனக்கு பிரச்சனை இல்லையா என்றால் எனக்கு பிரச்சனையில்லை.

இந்த புரோநோட்டுகளில் பணம் வாங்கியவரும், சாட்சிகளும் வேறு வேறு எழுது கோளில் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம ் காட்டப்படும் புரோநோட்டுகளில் நீல நிற மையில் ரூபாய் என்ற இடத்தில ் பண மதிப்பை எழுதியது நான் தான். அந்த கையெழுத்து என்னுடையது தான். தேவைப்பட்டால் நான் நீல நிற பேனாவையும் உபயோகப்படுத்துவேன். ஆக முதலில் 5 மற்றும் 2வது உள்ள 4 புரோநோட்டுகளையும் முழுமையாக நான் தான் வரைவு செய்தேன். சாட்சிகள் என் முன்னிலையில ் தான் கையொப்பமிட்டார்கள். கடன் பெற்றதாக சொல்லப்பட்டு அதில் கையொப்பமிட்ட இருவருவருக்கும் என்ன உறவு முறை என்று எனக்குதெரியாது. அ ந்த 9 புரோநோட்டுகளையும் வரை செய்ய என்னிடம் கேட்டுக்கொண்டது யார் என்றால் எனக்குதெரியவில்லை. அந்த புரோநோட்டுகளை படித்து பார்த்தால் தான் தெரியும். எனக்கு தற்பொழுது 72.

சுமார் 4, 5 வருடங்களாக ஆவணம் எழுதும் பணியை என் உடல்நிலை சரியில்லாததால் விட்டுவிட்டேன். வயதின் காரணமாக தடுமாற்றமும், மயக்கமும் உள்ளது.

குறுக்கு விசாரணை

எனக்கு அழைப்பாணை வரவில்லை. அவரிடம் ஒப்புகை அட்டையை காட்டி கேட்ட போது அதிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை கூறினார். நான் சாட்சி சொல்வதற்கு தபாலோ அல்லது அழைப்பாணையோ வரவில்லை. என்னை யார் சாட்சியம ் அளிக்க அழைத்து வந்தார்கள் என்றால் நான் ஆகத்தான் வந்தேன். நான் ஆவண எழுத்தர் என்ற உரிமம் எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வரவில்லை என் வீட்டில் உள்ளது. ஆதார் அட்டை மட்டும் எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் என்னுடைய கையெழுத்து அருகில் லைசென்ஸ் எண் உள்ளது ஆனால் விலாசம் இல்லை என்றால் சரிதான். பாண்டில் புளூ மையினால் எழுதப்பட்ட விவரங்கள் வேறு யாரோ ஒருவரால் எழுதப்பட்டது என்றால் நான் தான் எழுதினேன்.

புளூ மையினால் எழுதியதும ் நான் தான் கருப்பு மையினால் எழுதியதும் நான் தான். நான் கருப்பு பேனாவும், புளூ பேனாவும் மாற்றி மாற்றி எழுதுவீர்களா என்றால் இல்லை. புளூ போனாவால் எழுதியது வேறு என்றால் சரி. கருப்பு மையினால் எழுதியது நான் தான்எ ன்றால் சரி. இந்த பாண்டு சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எழுதினோனா என்றால் ஆமாம். 9 பாண்டுகளும் ஒரே நாளில் தான் எழுதினேன் என்றால் சரிதான். பணம் கொடுத்தவர், பணம் வாங்கியர் என்னிடம் நேரிடையாக வரவில்லை என்றால் வந்திருப்பார்கள் குறிப்பாக அவர்கள் தான்எ ன்று எனக்கு தெரியாது. 9 பாண்டுகளும் 3 வருடங்களுக்கு முன்பு தான் எழுதியது என்றால் சரிதான். எல்லா பாண்டுகளும் ஒரே தேதியில் தான் எழுதினேன். 9 பாண்டுகளும் மூர்த்தி என்பவர் தான்எ ன்னிடம் எழுதக்கொடுத்தார். சாட்சிகள் யார் என்று எனக்குதெரியாது

என்றால் சரிதான். என் முன்பு சாட்சிகள் கையொப்பம் செய்தார்களா என்றால் சாட்சிகள் கையெழுத்து போட வந்தார்கள் ஆனால் அவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் அல்ல.

கடந்த 5 வருடமாக நான் பாண்டு எழுதுவதில்லை என் ஊரில் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். இந்த பாண்டு எழுதுவதற்கு எடுத்து வந்தவர் என் வீட்டிற்கு தான் எடுத்து வந்து எழுதினாரா என்றால் ஆமாம், பிறகு சார்பதிவாளர் அலுவலகத்தில் எடுத்து வந்து எழுதினார். எனக்கு வயது அதிகமானதால் நான் வெளியில் எங்கும் செல்வதில்லை தற்பொழுது பாண்டு எதுவும் எழுதுவதில்லை. அந்த 9 பாண்டுகளையும் என் வீட்டில் தான் எழுதினேனா என்றால் ஆமாம். புரோநோட்டில் எழுதியதை தவிர வேறு எதுவும் தெரியாது என்றால் நான் எழுதியது நான் தான் நான் பாண்டு எழுதி முடித்த பிறகு அதன் பிறகு தான் கையெழுத்து போட்டார்கள் அதன் பிறகு தான் சாட்சிகள் கையெழுத்து போட்டார்கள். நான் கூறியதுபோல் தபால் வரவில்லை என்றாலம், அழைப்பாணையும் வரவில்லை என்றாலும் என் ஊாக்காரர் என்பதால் என்னை அழைத்து வந்து பொய்சாட்சியம சொல்கிறேன் என்றால் ஆமாம. மூர்த்தி தான் என்னை அழைத்து வந்து சாட்சி சொல்லச்சொன்னார் என்றால சரிதான். மூர்த்திக்காக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.